

நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலக முதன்மை கூட்ட அரங்கில் மாவட்ட அளவிலான அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழக தலைவர் .என்.கௌதமன் ,தாட்கோ கழக தலைவர் உ.மதிவாணன், நாகப்பட்டினம் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.முகமது ஷாநவாஸ, கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினர் .நாகைமாலி, நாகை நகர்மன்ற தலைவர, நகர கழக செயலாளர் இரா.மாரிமுத்து வட்டார ஆத்மா குழு தலைவர்கள் மகா.குமார், செல்வ.செங்குட்டுவன், என்.ஆனந்த் மற்றும் பலர் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சுவீடன் நாட்டில் உள்ள அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் நலன் கருதி தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் சார்பில் 1 முதல் 5 ஆம் வகுப்புகளுக்கான தமிழ்ப் பாடநூல்களை வழங்கினார்.

### திருப்பூர் மாவட்டத்தில்

# ‘தமிழ்ப் புதல்வன்’ திட்டத்தின் கீழ் 4,715 மாணவர்களுக்கு வங்கி ஏ.டி.எம். கார்டுகள்!

## அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், என்.கயல்விழி செல்வராஜ் வழங்கினர்!

திருப்பூர், ஆக. 13-

தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் முதல்வர் அவர்கள் கோவை மாவட்டத்தில் தமிழ்ப் புதல்வன் திட்டத்தினை தொடங்கி வைத்ததை தொடந்து, திருப்பூர் மாவட்டம் பல்லடம் அருகேயுள்ள பொங்கலூர் ஒன்றியம் அவினாசி பாளையம் ஜெய் ஸ்ரீராம் பொறியியல் கல்லூரி அரங்கில் தமிழ்ப் புதல்வன் திட்டத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்து ராஜ் தலைமையில், திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க. செல்வராஜ், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டல தலைவர் இல.பத்மநாபன், திருப்பூர் வடக்கு மாநகர கழக செயலாளர், மாநகராட்சி மேயர் நா.தினேஷ்குமார் ஆகியோர் முன்னிலையில் தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் திருப்பூர் மாவட்டத்தில் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் சார்பில் தமிழ்ப் புதல்வன் திட்டத்தின் கீழ் உயர்கல்வி பயிலும் 4715 மாணவர்களுக்கு வங்கி ஏ.டி.எம். கார்டுகளை வழங்கினர்.

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பேசியதாவது : தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களின் நலனுக்காக எண்ணற்ற திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார். குறிப்பாக கல்விக்கு முக்கியத்துவம் அளித்து பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அந்த வகையில் தமிழ்நாட்டில் உயர் கல்வியில் பெண்களின் சேர்க்கையை அதிகரிக்கும் நோக்கத்துடன் அறிமுகப் படுத்தப்பட்ட • “மூவலூர் இராமாமிர்தம் •அம்மையார் உயர் கல்வி உறுதி திட்டம்” (புதுமைப் பெண் திட்டம்) பெண்களின் உயர் கல்வியில் பெரும் முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்நாட்டில் அரசு பள்ளிகளில் பயிலும் மாணவிகளின் உயர்கல்வி சேர்க்கையினை அதிகரிக்கும் பொருட்டு அரசு பள்ளிகளில் 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை பயின்று மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை பயின்று, மேற்படிப்பில் சேரும் அனைத்து மாணவிகளுக்கும் சான்றிதழ் படிப்பு, பட்டயப்படிப்பு, பட்டப்படிப்பு. தொழிற் கல்வி ஆகியவற்றில் இடைநிற்றல் இன்றி கல்வி பயின்று முடிக்கும் வரை மாதம் ரூ.1,000 அவர்களின் வங்கி கணக்கிற்கு நேரடியாக செலுத்தப் பட்டு வருகிறது.

இந்த மாணவிகள் ஏற்கனவே பிற கல்வி உதவித் தொகை பெற்று வந்தாலும் இத்திட்டத்தில் கூடுதலாக உதவி பெறலாம். இத்திட்டத்தின் நோக்கம் பெண்களுக்கு உயர் கல்வி அளிப்பதன் மூலம் பாலின சமத்துவத்தை ஏற்படுத்துதல். குழந்தை திருமணத்தை தடுத்தல், குடும்ப சூழ்நிலை மற்றும் வறுமை காரணமாக மேற்படிப்பு படிக்க இயலாத மாணவிகளுக்கு பொருளாதார ரீதியாக உதவுதல், பெண் குழந்தைகளின் இடைநிற்றல் விகிதத்தை குறைத்தல், பெண் குழந்தைகளின் விருப்ப தேர்வுகளின் படி அவர்களின் மேற்படிப்பை தொடர ஊக்குவித்தல், உயர்கல்வியினால் பெண்களின் திறமையை ஊக்கப்படுத்தி அனைத்து துறைகளிலும் பங்கேற்க செய்தல், பெண்களுக்கான தொழிற் வாய்ப்புகளை அதிகரித்தல். பெண்களின் சமூக பாதுகாப்பை உறுதி செய்தல். அறிவார்ந்த சமுதாயத்தை உருவாக்க வழி வகை செய்யும், இத்திட்டத்தினை முதலமைச்சர் அவர்கள் 05.09.2022 அன்று தொடங்கி வைத்தார்.

இத்திட்டம் பெண்களின் உயர்கல்வியில் பெரும் முன்னேற்றத்தை ஏற்படுத்தி வருகிறது. திருப்பூர் மாவட்டத்தில் 68 கல்லூரிகளில் 10,422 மாணவிகள் பயனடைந்து வரு கின்றனர். அதே போல், அரசு பள்ளிகளில் பயின்ற ஏழை, எளிய மாணவர்களை சாதனையாளர்களாக உருவாக்கிடவும், அரசு பள்ளி. மாணவர்களின் உயர் கல்வி சேர்க்கையை உயர்த்திடவும் “தமிழ்ப் புதல்வன்” திட்டத்தை கோவை மாவட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்துள்ளார். “தமிழ்ப்புதல்வன்” என்னும் தொலைநோக்கு திட்டத்தினை செயல்படுத்தும் போது மாணவர்கள் கல்லூரியில் அதிக அளவில் சேர்வார்கள். இது சேர்க்கை விகிதம் அதிகமாவதற்கு வழி வகை செய்யும். அரசு பள்ளிகளில் மாணவர்களின் சேர்க்கை விகிதத்தினை அதிகப்படுத்தும். மாணவர்கள் பாட புத்தகங்கள், பொது அறிவு நூல்கள் மற்றும் இதழ்களை வாங்கி கல்வியை மெறுகேற்றிட உதவும். இளைஞர்களின் ஆற்றலை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்தி நமது மாநிலம் மற்றும் நாட்டின் எதிர்கால தூண்களாக திகழ்வார்கள். கல்வி இடைநிற்றலை தடுக்க முடியும். 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை அரசு பள்ளிகளில் பயின்று உயர் கல்வியில் சேரும் மாணவர்கள், 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் பயின்று உயர்கல்வி பெறும் மாணவர்கள் இத்திட்டத்தில் கலை மற்றும் அறிவியல் பிரிவு, பொறியியல் பிரிவு, மருத்துவ படிப்பு, சட்டம் சார்ந்த படிப்புகள். ஒருங்கிணைந்த பாட பிரிவு, இத்திட்டத்தில் கீழ் மாணவர்களுக்கு மாதம் ரூ.1,000 அவர்களின் வங்கி கணக்கிற்கு நேரடியாக செலுத்தப்படும். ஒரே குடும்பத்திலிருந்து எத்தனை மாணவர்கள் தகுதி பெற்றிருப்பினும் அனைவரும் இத்திட்டத்தின் கீழ் பயனடைய விண்ணப்பிக்கலாம். இந்த மாணவர்கள் ஏற்கனவே பிற கல்வி உதவித் தொகை பெற்று வந்தாலும் இத்திட்டத்தில் கூடுதலாக உதவி பெறலாம். முதல் கட்டமாக திருப்பூர் மாவட்டத்தில் 43 கல்லூரிகளில் 4715 மாணவர்கள் பயன் பெறுகின்றனர் என்று அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் திருப்பூர் சார் ஆட்சியர் சௌம்யா ஆனந்த், பொங்கலூர் ஒன்றியக்குழு பெருந்தலைவர் வழக்கறிஞர் எஸ்.குமார், மாவட்ட சமூக நலத்துறை அலுவலர் ரஞ்சிதா தேவி, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் துர்கா பிரசாந், ஜெய் ஸ்ரீராம் பொறியியல் கல்லூரி தாளாளர் கோவிந்தசாமி, ஒன்றிய கழக செயலாளர்கள் எஸ்.பாலுச்சாமி, பொ.அசோகன் (பொங்கலூர்), நா.சோமசுந்தரம், சு.கிருஷ்ணமூர்த்தி (பல்லடம்), நகர கழக செயலாளர் ந.ராஜேந்திரகுமார், கூட்டுறவு வங்கி முன்னாள் தலைவர் அக்ரோ சீனிவாசன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பி.கே.கனகராஜு, ஒன்றிய கவுன்சிலர், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் லோகு பிரசாத், ஒன்றிய துணை செயலாளர் லதா வெங்கிடாசலபதி உள்பட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மாவட்ட, ஒன்றிய, நகர, வட்டக் கழக, கிளை கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வை. பெருமாள்

**ஆகஸ்ட் 13 (2001)**



தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை பொதுச்செயலாளர், தமிழக சட்டமன்ற உறுப்பினர். ஏறத்தாழ 30 ஆண்டுகளாக தொழிற் சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தவர்.

தளபதி அவர்கள் தலைமையில் குடிநீர் பிரச்சினைக்காக நடைபெற்ற மறியல் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

2001 ஜூன் மாதத்தில் தலைவர் கலைஞர் அவர்களை அ.தி.மு.க. அரசு காவல்துறை காட்டுமிராண்டித்தனமான முறையில் கைது செய்ததைக் கண்டித்து நடைபெற்ற கண்டனப் பேரணியில் தொழிலாளர் அணிக்கு தலைமை தாங்கி முழக்கமிட்டு சென்றபோது மயக்கமுற்றார். அதுவே அவரது கடைசி பயணமானது.

“பொதுவாக அவருடைய வடிவம் ஆஜானுபாகுவான உருவம். புராணீக பாஷையிலே சொல்ல வேண்டுமென்றால், தி.மு.கழகத்தினுடைய “பீமசேனன்” வை.பெருமாள் என்று சொன்னால் அது மிகையாகாது. அந்த உருவமா சாய்ந்துவிட்டது என்று நானும் எண்ணியெண்ணிப் பார்த்தேன். ஏங்கியேங்கித் தவித்தேன்” என தலைவர் கலைஞர் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# கள்ளக்குறிச்சியிலிருந்து கூடுதல் அரசு பேருந்து சேவை!

## வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

கள்ளக்குறிச்சி, ஆக.13.

கள்ளக்குறிச்சியில் இருந்து சென்னை, அடரி, தாவடிப்பட்டு உள்ளிட்ட இடங்களுக்கு கூடுதல் அரசு பஸ் சேவையை வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ. கொடி அசைத்து வைத்து தொடங்கி வைத்தார்.

திராவிட மாடல் நல்லாட்சியில் பொதுமக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையில் கள்ளக்குறிச்சி பஸ் நிலையத்தில் இருந்து அடரி, தாவடிப்பட்டு, சென்னைக்கு கூடுதலாக 3 அரசு பஸ் சேவைக்கான தொடக்க விழா நடைபெற்றது,பஸ்

நிலையத்தில் நடைபெற்ற விழாவுக்கு தெற்கு மாவட்ட கழக செயலாளர் ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் தலைமை தாங்கி கொடியசைத்து வைத்து 3 வழித்தடங்களில் கூடுதல் அரசு பஸ்களை இயக்கி வைத்தார்.

அதில் ஒரு டவுன் பஸ் சானது கள்ளக்குறிச்சியிலிருந்து காரனூர், குதிரைச்சந்தல், நல்லாத்தூர், தோப்பூர்,சுகர்மில், கச்சிராயபாளையம், அம்மாப்பேட்டை, பால்ராம்பட்டு, கரடிசித்தூர் வழியாக தாவடி பட்டுக்கும், மற்றொரு டவுன் பஸ் கள்ளக்குறிச்சியிலிருந்து விருகாவூர், அசகளத்தூர் வழியாக அடரிக்கும், அதே போல் கள்ளக்குறிச்சியிலிருந்து உளுந்தூர்பேட்டை, விழுப்புரம், திண்டிவனம் வழியாக கிளாம்பாக்கம் தாம்பரத்துக்கு மற்றொரு அரசு பஸ்சும் இயக்கி வைக்கப்பட்டது.

இவ்விழாவில் மாவட்ட ஊராட்சிக் குழுதலைவர் புவனேஸ்வரி பெருமாள், கள்ளக்குறிச்சி நகரமன்ற தலைவர் ஆர்.சுப்ராயலு, ஒன்றிய கழக செயலாளர்கள் வெங்கடாசலம், சத்திய மூர்த்தி, கனகராஜ், நெடுஞ்செழியன்,தெற்கு மாவட்ட கழக அவை தலைவர் ராம மூர்த்தி, மாவட்டக் கழக துணை செயலாளர் காமராஜ், நகர துணை செயலாளர் அப்துல் ரசாக் மற்றும் அரசு போக்குவரத்து கழக கிளை மேலாளர்கள், மாவட்ட,ஒன்றிய,நகர, பேரூர் கழக நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### மொழிப்போர்த் தியாகி மருதுவாஞ்சேரி சாரங்கபாணி தாயார்

# திருமதி காசாம்பு அம்மாள் மறைவு!

## பூண்டி கலைவாணன் எம்.எல்.ஏ. - கழகத்தினர் அஞ்சலி!

திருவாரூர்,ஆக13.

திருவாரூர் மாவட்டம் குடவாசல் ஒன்றியம் மருதுவாஞ்சேரியைச் சேர்ந்த மொழிப்போராட்ட தியாகி மறைந்த சாரங்கபாணி அவர்களின் தாயார் காசாம்பு அம்மையார் வயது மூப்பினால் இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். அம்மையாருக்கு வயது 95. மறைந்த காசாம்பு அம்மையாரின் உடலுக்கு மாவட்ட செயலாளர் பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ., கழக நிர்வாகிகளுடன் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்.

மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தமது 14ம் வயதில் திருவாரூர் வீதிகளில் முன்னெடுத்த மொழிப் போராட்டத்தைபோல, தமிழ்நாடு முழவதும் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மொழிப்போராட்டத்தின்போது, தான் பயின்ற மயிலாடுதுறையில் ஏ.வி.சி.கலைக்கல்லூரியில், தான் முன்னின்று நடத்திய அந்த மொழி காக்கும் போராட்டத்தில், அன்னை தமிழ் மீது கொண்ட பேரன்பால் , செம்மொழியை சீர்குலைக்க வரும் இந்தியை எதிர்த்து தன் தேக்குமர தேகத்துக்கு தீயை வைத்துக்கொண்டு 15.3.1965 அன்று தீக்கிரையாகி பலியான ஒரு மொழிப்போராளி.

தீக்கிரையான அந்த வீர இளைஞராம் மொழிப் போராட்ட தியாகி சாரங்கபாணியை தமிழ் கூறும் இந்த நல்லுலகிற்கு தந்த மொழிப்போர் தியாகி மருதுவாஞ்சேரி சாரங்கபாணி அவர்களின் தாயார் காசாம்பு அம்மையார் அவர்கள் அவரது சொந்த ஊரான குடவாசல் ஒன்றியம் மருதுவாஞ்சேரியில் தனது 95ம்வயதில் நேற்று முன்தினம் 11.08.2024 வயது மூப்பினால் இயற்கை எய்தினார். அம்மையாருக்கு மறைந்த சாரங்கபாணி என்ற மகனுடன், நலமுடன் இந்திரா காந்தி என்கிற மகளும் உள்ளார்.

மறைந்த அந்த வீரத் தாய்க்கு, தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் தளபதியார் அவர்களின் வழில்காட்டுதல்களின்படி, தமிழ் மொழிகாத்து தமிழினம் காக்கும் இயக்கமாம் திராவிட முன்னேற்ற கழகத்தின் திருவாரூர் மாவட்டம் சார்பில் பூண்டி.கே.கலைவாணன், இயக்கத்தின் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர மற்றும் பேரூர் கழக நிர்வாகிகளும் மறைந்த மொழிப்போர் தியாகி மருதுவாஞ்சேரி சாரங்கபாணி அவர்களது இல்லத்திற்கு சென்று மறைந்த அவரது தாயார் காசாம்பு அம்மையார் அவர்களுக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி,அவரை இழந்துவாடும் குடும்பத்தாருக்கு ஆறுதலை தெரிவித்து வந்தனர்.

அம்மையாரது இறுதி ஊர்வலம் நேற்று [12.08.2024] காலை 10மணிக்கு நடைபெற்றது.

### ஆர்.கே.நகர் மேற்கு பகுதியில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 6வது நினைவு நாள்!

## ஆர்.டி.சேகர் - எஸ்.ஜெபதாஸ் பாண்டியன் - ஜெ.ஜெ.எபினேசர் பங்கேற்பு!

சென்னை, ஆக.13-

ஆர்.கே.நகர் மேற்கு பகுதி திமுக சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் ஆறாவது நினைவு நாளை முன்னிட்டு பகுதி செயலாளர் எஸ். ஜெபதாஸ் பாண்டியன் ஏற்பாட்டில் பகுதி அவை தலைவர் மாஸ் டி.வெங்கடேசன் தலைமையில் ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, முன்னிலையில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, கலைஞர் அவர்களின் திருஉருவப் படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தியும் சுமார் 1000 நபர்களுக்கு மதிய உணவும் வழங்கினார்.

இதில் எஸ்.ஆர்.கமலக் கண்ணன், இரா.மதியழகன், எம்.கோவிந்தராஜ், எம். லோகநாதன், டி.திராவிட செல்வி, பி.சீனிவாசன், வட்ட கழக செயலாளரும் மண்டல குழு தலைவர் நேதாஜி யு.கணேசன், எஸ். எல்.சுந்தர், கி.தேவன், ஆர்.ஏ.எம். சசிகுமார், ஜி. ஏழுமலை, எம்.ஆர்.பி. ராஜன், டாக்டர்.வை.கலைவாணன், எஸ்.எம். பரசுராமன், எம்.விமலா மற்றும் மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட துணை அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், சார்பு மன்ற நிர்வாகிகள் கழக முன்னோடிகள் கலந்து கொண்டு மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.



சேலம் மத்திய மாவட்டம் தாரமங்கலம் கிழக்குஒன்றியத்தில். அ.தி.மு.க. தே.மு. தி.க.பா.ம.க., அ.ம.மு.க.வைச் சேர்ந்த 170 பேர் பெண்கள் உட்பட்ட அக்கட்சிகளைவிட்டு விலகி மாவட்டக் கழக செயலாளர். இரா. இராஜேந்திரன் எம்.எல்.ஏ. முன்னிலையில் தி.மு.க வில் இணைந்தனர். அவர்களுக்கு மாவட்டக் கழகச் செயலாளர் கைத்தறி ஆடை அணிவித்தார். உடன் தாரமங்கலம்.கிழக்கு ஒன்றிய செயலாளர். இராஜ. அய்யப்பன். ஓமலூர் கிழக்கு ஒன்றிய செயலாளர். ஓ. எம்.ரமேஷ் பொதுக்குழு உறுப்பினர் குப்புசாமி, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் சண்முகம் ஆகியோர் இருந்தனர்.



சேலம் மாவட்டம் தலைவாசல் ஒன்றியம் சித்தேரி ஊராட்சியில் ரூ. 25 லட்சம் மதிப்பீல் கட்டி முடிக்கப்பட்ட பால் குளிரூட்டும் நிலையத்தை மத்திய ஒன்றிய செயலாளர் சாத்தப்பாடி மணி திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செ.குணசேகரன், வடக்கு ஒன்றிய கழக செயலாளர் பாலமுருகன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் தலைவாசல் மு. தேவேந்திரன்,வேப்பம்பூண்டி பாஸ்கரன் , சித்தேரி ஊராட்சி மன்ற தலைவர் ஆறுமுகம், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் கண்ணுசாமி கிளை கழக செயலாளர்கள் செல்லையா, கருப்பையா, ஆறகழூர் அறங்காவலர் குழு தலைவர் தனசேகரன் ,ஜெயராமன்,அன்புமணி ஆகியோர் கலந்து கொண்டனர்.